நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன்.
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

யோவான் 11:25

# அமரர்.திரு.ஜெயரெத்தினம் திவ்வியநாதன்

அவர்களின்

# நினைவு மலர்

23.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயரெத்தினம் திவ்வியநாதன்

**பெற்றோர்** : ஜெயரெத்தினம் - வெள்ளையம்மாள்

**பிறப்பிடம்** : திருக்கோவில் (அம்பாறை மாவட்டம்)

**கல்வித் தகமை** : மெய்யியற்றுறை (தத்துவம்), சிறப்புக் கலைமாமணிப் பட்டம், பேராதனை பல்கலைக்கழகம்

**வேறு தகமைகள்** : வாகீஸ கலாநிதி கௌரவம்

**தொழிற் தகமைகள்** : கலாசார அலுவலர்
ஆராய்ச்சி அலுவலர்
பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சு.
நாடாளுமன்ற உறுப்பினர் அம்பாறை மாவட்டம் உதவி செயலாளர் தேசிய ஒருங்கிணைப்பு இனவிவகார அமைச்சு
ஆலோசகர் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு அமைச்சர் - சிரேஷ்ட அதிகாரி
(Senior Diplomatic Officer) இலங்கைத் துணைத் தூதரகம், சென்னை

**தொடர்புடைய கலை, இலக்கியத் துறைகள்**

: கட்டுரை, கவிதை, இலக்கியம், அரசியல் ஆய்வு, நாடகம், நாட்டுக்கூத்து, எழுத்து, நடிப்பு, ஆன்மீக இலக்கிய உரைகள்

**முதற்படைப்பு** : ''முதற்கனி''

**எழுத்துத்துறை சார்ந்த வேறு பெயர்கள்**

: ''திதி'', ''சியாமளன்'', ''ஜெதிநா''

**எழுத்து இலக்கியத்துறை பரிச்சயம்**

: அண்ணளவாக 30 ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் வழிகாட்டி...

''எம் பெயரின் முன்பதாகத் தன்பெயரைத்
தந்த மேலோன்
'அ' கரத்தை அறிவித்து
அறிவு வழி விட்ட நல்லோன்
உயரத்தில் எமை இருத்தி
உவகை கொள நினைத்த... தந்தை''
என்ற உங்கள் வரிகளையே உங்களுக்கு
காணிக்கையாக்குகின்றோம்.

அப்பா என்ற வார்த்தைக்கு அகராதியில் உள்ள அர்த்தத்தை உம்மில் கண்டோம். அனுபவித்தோம். ஒரு நல்ல தகப்பனாய் அன்போடும், பாசத்தோடும் எம்மை நல் ஒழுக்கத்தோடு வளர்த்து, இறைபக்தியும், செல்வத்தில் உயர்ந்த செல்வமான கல்விச் செல்வத்தையும் எமக்களித்தீர். எப்பெருந்துயர் வந்த வேளையிலும் ஒரு குடும்பத்தலைவனாய் எம்மை பாதுகாத்து வழிநடத்தி நம்பிக்கை ஊட்டினீர்!

உடம்பில் அத்தனை வலி, வேதனையிருந்தும் உம் பேச்சிலும், சிரிப்பிலும் அதை மறைத்து எம் துயர் துடைத்து மகிழ்வித்தீர்! எமது தவறுகளையும், தப்பிதங்களையம் மன்னித்து அன்பால் அதனை திருத்தினீர் அன்பான கணவனாய் அம்மாவிற்கு துணை நின்றீர், அவர் படும் கஷ்டங்கள் கண்டு கண்ணீர்விட்டீர். எப்பிரச்சினையிலும் அவரை விட்டுப் பிரியாமல் துன்பத்திலும் இன்பத்திலும் அவரோடு இருந்தீர்.

சொந்தக் காலில் நிற்கும் தைரியமும், நம்பிக்கையும் எமக்கு உண்டு என்று எங்களையும், அம்மாவையும் விட்டுப் பிரிந்து ஓய்வெடுக்க முடிவெடுத்துவீட்டீர். என்றுமே உமது வழிகாட்டலும், ஆசீர்வாதமும் எமக்கு எப்போதும் தேவை. உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும் நினைவால் எம்மை விட்டுப் பிரியாமல் என்றும் எம்முடன் இருக்கும்... அப்பா!

மனைவி - பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பிலும் வாழ்வார்"

யோவான் 11: 35



# அமரர் திரு. ஜெ. திவ்வியநாதன் அவர்கள்

மண்ணில்
20.04.1952

விண்ணில்
23.08.2012

23.09.2012

31ம் நாள் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

Prime Minister of Sri Lanka

**Message of the Prime Minister**

While thanking Mrs. S. Thiviyanathan and the family for inviting me to attend the thanksgiving service and the almsgiving scheduled to be held on 23rd September 2012 in memory of late Mr. Thiviyanathan, I regret my inability to participate at the event due to my illhealth.

The untimely demise of Mr. Thiviyanathan, former Member of Parliament, was an irreparable loss to the people of Ampara District in particular and to the country in general. He was a dedicated social worker who rendered invaluable service to the people of the Eastern Province.

Mr. Thiviyanathan was born on 20th April 1952 in Thirukkovil in the Ampara District and had his primary and secondary education in Ampara. After completion of his higher studies at the University of Peradeniya he established the Bond Institute in Thirukkovil, the institution through which he provided much needed education facilities to the children of the district.

As a Member of Parliament of the Ampara District, his tenure from 1989 to 1994 is etched in the memory of the people of Ampara because of his commitment to uplift the economic, social and cultural status of people of the District. After relinquishing parliamentary politics he has served as Director of the Ministry of Cultural Affairs and Minister at the office of Deputy High Commissioner in Chennai. Mr. Thiviyanathan was a forceful speaker, writer, poet and reputed political analyst.

I pay my tribute to this great patriot from the Eastern Province whose life was an example to all.

D.M. Jayaratne
Prime Minister

13th September 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தங்கமகன்' -- திரு ஜெ. திவ்வியநாதன்

கிழக்கிலங்கையிலுள்ள திருக்கோவில் (கந்தபாணந்துறை) கிராமத்தை பிறப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்ற திரு. ஜேம்ஸ் செட்டியாரின் மகனும் எங்கள் தந்தையுமான காலஞ்சென்ற திரு ஜெயரெத்தினம் அவர்கள் ஒரு கண்டிப்பான ஆசிரியரென, அவரிடம் கல்வி கற்று உயர் பதவிகளை வகித்த பலர் அடிக்கடி கூற நான் கேட்டிருக்கிறேன்.

தனது பணியில் கண்டிப்பானவராயிருந்தாலும் பிள்ளைகளை அதிகம் நேசித்த அன்பான தந்தையாகவும் அவர் இருந்தார். கடைசி ஆண்மகனாகிய காலஞ்சென்ற எமது சகோதரன் திரு. திவ்வியநாதனுக்கு **'தங்கமகன்'** என்று செல்லப் பெயரிட்டு பாசமுடன் அழைத்தார்.

தங்கமகனும் பாடசாலையில் கல்வி கற்ற காலம் முதல் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற காலம் வரை முதல்நிலை மாணவனாக பரிமளித்து, விரிவுரையாளர்களின் பாராட்டையும் பெற்று ஒரு சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார்.

ஒரு பாடசாலையிலோ, கல்லூரியிலோ ஆசிரியனாக பணியாற்றி பணம் சம்பாதித்து வசதியாக வாழக்கூடிய தகுதியும், திறமையும் இருந்தும், தான் மட்டும் ஒரு பட்டதாரியாக இருந்தால் போதாது, தனது கிராமத்திலும், சுற்றியுள்ள கிராமங்களிலுமுள்ள இளைஞர்களையும், யுவதிகளையும் பட்டதாரிகளாக்க வேண்டும் என்ற வாஞ்சையில், 'ரியுசன் சென்றர்' ஒன்றை தனது சொந்தச் செலவிலேயே ஆரம்பித்து நடாத்தி, பல பட்டதாரிகள் உருவாக காரணமாயிருந்தார். ஆனால் 'ரியுசன் சென்றர்' அவரை செல்வந்தனாக அல்ல கடனாளியாகவே ஆக்கியது. ஆயினும் இவரது தன்னலமற்ற சேவையும், கல்வித்திறனும், பேச்சுவன்மையும், இளைஞர்களிடையேயும், ஊர்மக்களிடமும் இவருக்கு ஏற்பட்ட மதிப்பும், மரியாதையும், செல்வாக்கும் இவரை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடச்செய்வதற்கு அடிப்படைக் காரணங்களாயமைந்தன.

நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்து ஆண்டுகள் செயலாற்றிய தம்பி திவ்வியநாதன் பின்னர் இனவிவகார அமைச்சு, நாடாளுமன்ற அமைச்சு, கிராமியக் கைத்தொழில் அமைச்சு முதலியவற்றில் உயர் பதவிகளையும் வகித்தார். இறுதியாக தமிழ்நாட்டின் சென்னையில் உள்ள பிரதி உயர் ஸ்தானிகராலயத்தில் முதன்மை அதிகாரியாக கடமையாற்றினார். இவை அனைத்தையும் தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடனேயே அவர் செய்தார் என நான் கூறுவேன். சில அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நலனுக்காகவும், அரசியல் இலாபத்துக்காகவும் கறிவேப்பிலை போல அவ்வப்போது அவரைப் பயன்படுத்தியதுண்டு. ஆயினும் இப்பதவிகளை தம்பி திவ்வியநாதன் தனது சுயநன்மைக்காகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவித்ததாகத் தெரியவில்லை. ஐந்து ஆண்டுகள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், பல அமைச்சுக்களில் உயர் அதிகாரியாகவும் பதவி வகித்த தம்பி திவ்வியநாதன், மரிக்கும் வரை தனக்கெனச் சொந்தமாக ஒரு வீட்டையோ வாகனத்தையோ வைத்திருக்காத ஒரு பொதுநலத் தொண்டனாகவே வாழ்ந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினராக செயலாற்றிய காலத்திலும், ஏனைய உயர் பதவிகளை வகித்த காலங்களிலும் மட்டுமன்றி, தவிர்க்க முடியாத சில காரணங்களினால் அரசியலிலிருந்து ஒதுங்கி இருந்த காலங்களிலுங்கூட, தன்னிடம் உதவி நாடி வந்த அனைவருக்கும் நேரம் காலம் பாராமல், தனது உடல் நலனையும் பேணாமல் தன்னாலியன்ற உதவிகளைச் செய்து கொடுத்ததை நான் கண்டிருக்கிறேன். உடலுக்கு கேடு விளைவிக்கக்கூடிய எத்தகைய தீயபழக்கமும் இல்லாதவராக, மரக்கறி உணவையே விரும்பி உண்ணுகிறவராக இருந்தும், இளவயதிலேயே நோய்வாய்ப்பட்டு, இம்மண்ணுலக வாழ்வை இவ்வளவு சீக்கிரமாக நிறைவு செய்ய வேண்டிய நிலைக்குள்ளானதற்கு தனது உடல் நலனைப் பேணுவதில் போதிய கவனம் செலுத்தாமலிருந்ததும் ஒரு காரணமாயிருக்குமோ என நான் கருதுகிறேன்.

ஒரு மனிதனின் வாழ்நாள் காலம் எழுபது வருடங்கள் என்றும், வலிமை மிகுந்தோர் எண்பது வருடங்கள் வாழக்கூடும் என்றும் திருமறை கூறுகின்றது (திருப்பாடல்கள் 90:10). ஆனால் தம்பி திவ்வியன் இப்பூவுலகில் வாழ்ந்த காலம் அறுபது வருடங்கள் மட்டுமே. ஆயினும் எண்பது வருடங்கள் வாழ்ந்தும் பலர் சாதிக்காத பலவிடயங்களை தம்பி திவ்வியநாதன் அறுபது வருடங்களில் செய்து சாதனை படைத்த ஒரு சாதனையாளனாக விளங்குகிறார்.

எங்கள் மூதாதையரின் பரம்பரைத் திறமைகள் பல தம்பி திவ்வியனிடம் நிறைந்து காணப்பட்டன. பல்கலைக் கழகத்தில் தான் விரும்பிக் கற்ற பாடங்களான மெய்யியல் (தத்துவம்), அரசியல், மொழி (தமிழ்) ஆகிய பாடங்களில் பெற்ற அறிவை மென்மேலும் விருத்திசெய்து, நடைமுறை வாழ்வில் அவற்றைப் பயன்படுத்தியதன் விளைவாக கௌரவ கலாநிதிப்பட்டங்களும் அவருக்கு வழங்கப்பட்டன. இனப்பற்றும், மொழிப்பற்றும், சமயப்பற்றும், ஊர்ப்பற்றும் கொண்ட ஒரு சமூகத் தொண்டனாகவும், கல்வி, கலை, கலாசாரம், பண்பாடு, அரசியல், இலக்கியம் முதலிய பல துறைகளில் பாண்டித்தியமுள்ள அறிஞனாகவும் அவர் விளங்கினார்.

இருபத்தைந்து வயதில் பட்டதாரியாகி, முப்பத்தேழுவயதில் நாடாளுமன்ற உறுப்பினனான தம்பி திவ்வியநாதன் ஓர் அரசில்வாதியாக மட்டுமன்றி திறமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியனாகவும், சிறந்த பேச்சாளனாகவும், எழுத்தாளனாகவும், விமர்சகனாகவும், இலக்கியவாதியாகவும், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் முதலிய கிராமியக்கலைகளில் தேர்ந்த கலைஞனாகவும், திரைப்பட நடிகனாகவும் தன்னை வெளிப்படுத்தியதன் மூலம் தனது பெற்றோருக்கும், குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் மட்டுமன்றி தான் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்த **தங்கமகனாக** ஜொலித்தார்

எங்கள் தந்தையின் மரணத்துக்குப்பின் தம்பி திவ்வியன் தந்தையின் இடத்தில் என்னை வைத்து மதித்து நடத்தினார். நானும் எனது மனைவியும் கனடாவுக்குப் புறப்படும் முன்பாக தம்பி திவ்வியனுடனும் குடும்பத்தாருடனும் தங்கியிருந்தே புறப்பட்டோம். அதன்பின்னர் அவரைக்காணமுடியாது போனது கவலையளிக்கிறது. ஆயினும் எமக்கு முன்பாக இவ்வுலக ஓட்டத்தை ஓடி முடித்தவர்களை மீண்டும் சந்திக்க முடியும் என எமது ஆண்டவர் இயேசு அளித்துள்ள வாக்குத்தத்தத்தின்படி தம்பி திவ்வியனை மீண்டும் முகமுகமாகச் சந்திப்போம் என்ற எதிர்கால நன்நம்பிக்கையோடு வாழ்கிறோம்.

தம்பி திவ்வியநாதனுடைய மனைவியாகிய சியாமளா (பேபி) அவரைக் காதலித்துக் கரம் பிடித்தவர். அவர்கள் குடும்ப வாழ்வில் பல சிறப்புகளும், உயர்வுகளும், மேன்மைகளும் இடம் பெற்றாலும், தம்பி திவ்வியனுடைய அரசியல், பொருளாதார வாழ்வு எப்பொழுதும் மகிழ்ச்சிகரமானதாக இருக்கவில்லை. அநேக வேளைகளில் அவர்கள் பல கஷ்டங்களுக்கூடாகவும், நெருக்கடிகளுக்கூடாகவும் துன்பங்களுக்கூடாகவும் செல்ல நேரிட்டதை நாங்கள் அறிவோம். அத்தகைய நேரங்களிலும், அவர் சுகயீனமுற்ற வேளைகளிலும் பேபி அவருக்கு துணையாக இருந்து தோள்கொடுத்து, கணவனுடைய இன்பங்களிலும், உயர்வுகளிலும் மட்டுமன்றி துன்பங்களிலும், துயரங்களிலும் பங்குகொண்டு வந்ததையும் நாங்கள் அறிவோம்.

குறுகியகாலத்தில் பல சாதனைகளைப்படைத்து சிறப்புற வாழ்வதற்கு வேண்டிய அனைத்து திறமைகளையும், ஆசீர்வாதங்களையும் ஈந்த ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் அதேவேளையில், அவரது பிரிவின் மூலம் ஏற்பட்டுள்ள ஈடுசெய்ய முடியாத இழப்பினால் வருந்தும் அருமை மனைவி, அன்புப் பிள்ளைகளுக்கு அந்த ஆண்டவர் தாமே ஆறுதலையும், எதிர்காலத்துக்கான நல்நம்பிக்கையையும், வழி நடத்துதலையும் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

**"கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்.**
**கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்."** (யோபு 1:21)

**அண்ணாச்சி (அருள்திரு. ஜெ.விவேகநாதன்)**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவின் படைப்புகளில் சிறு துளி!

என் பரம தகப்பனே, எனது இருதயத்தின் சிந்தனைகள் உம்மால் சீராக்கப்பட்டும், என் நாவின் உச்சரிப்புகள் உம்மால் நல்லவையாகட்டும். உமது சித்தங்களே எனது செயல்களாகட்டும். அவை ஏனையோருக்கும் நன்மை பயக்கட்டும்! நன்றி இறைவா!

## காணிக்கை

எண்ணத்தை எழுத்தாக்கி என் இனத்தோர் எண்ணத்தில்
ஏற்றி வைக்க ஆற்றல் தந்த என் தமிழை
போற்றித் தினம் பூசிக்கின்றேன்.

உதிரத்தில் உருவாக்கி உதிரத்தைப் பாலாக்கி
உடல்வாதை முழுவதையும்
உளத்தென்பால் தான் சகித்து
உலகை நான் தொட்ட பின்பும்
நான் வாழ தான் வாழ்ந்து
நான் உயர்வு பெற்ற போது
வான் வாழத் தான் விரைந்த

என் அன்னை.............

என் பெயரின் முன்பதாகத் தன்பெயரைத்
தந்த மேலோன்
'அ' கரத்தை அறிவித்து
அறிவு வழி விட்ட நல்லோன்
உயரத்தில் எனை இருத்தி
உவகை கொள நினைத்த

தந்தை......

தமிழ் விதை தனை விதைத்து
தமிழதை நீருமாக்கி
தமிழதே உரமாய்க் கொண்டு
தமிழ் என்னுள் வளர்வதற்கு
தக்க கல்வி தந்த தகைமை மிகு

ஆசிரியர்......

எண்ணிப் பார்க்கின்றேன்....
இதயம் நிறைகின்றது
எனது இந்த முதற்கனி
அவர் வளர்த்த மரக்கனி

எனவே.....
அவரவர் பெயருக்கே
இது ஒரு காணிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்த்தமிழும் தாய்மண் விட்டகன்றோரும்

புலம்பெயர்ந்து இங்கிலாந்தில், அமெரிக்காவில், கனடாவில், ஜேர்மனியில், சுவிட்சர்லாந்தில், பிரான்சில், டென்மார்க்கில், நியூசிலாந்தில், தென் ஆபிரிக்காவில் வாழும் நம் தமிழினத்தவர் அந்தந்த நாட்டு மொழிகளைக் கற்கின்றனர்.

அந்த நாட்டு மக்களோடு உரையாடுகையில் தொடர்பு கொள்ளுகையில் அவர்தம் மொழிகளை உபயோகிக்கின்றனர் என்பது உண்மையே. இது அவசியமானது - தவிர்க்க முடியாதது. ஆனால் அங்குள்ள நம் தமிழர் தமது தமிழ் இனத்தவரோடு பேசுகையில் தொடர்பு கொள்ளுகையில் தனித்துவமும் தூய்மையுமான நமது தாய்த்தமிழில் தான் தொடர்பு கொள்கின்றனர் என்பது நன்றியோடு சுட்டிக் காட்ட வேண்டிய பெருமைக்குரிய விடயம்.

**தொலைபேசி அழைப்பொன்று கிடைக்குமாயின் நாம் வழக்கத்தில் உபயோகிக்கும் 'ஹலோ' என்ற சொல்லைக் கூடப் புலம்பெயர்ந்து வாழும் நம் தமிழர் உபயோகிப்பதில்லை என்று உறுதியாகக் கூறுவேன். தொலைபேசி அழைப்பு கிடைத்தவுடன் 'வணக்கம்' என்ற தென்பூட்டும் தெவிட்டாத மரியாதைக்குரிய தமிழ் வார்த்தையை அவர்கள் முதலில் மொழிகின்றனர். 'நன்றி' என்ற நற்றமிழ் வார்த்தை மூலமே அவர்தம் தொடர்பினை நிறைவு செய்கின்றனர் என்பதனை உறுதியோடு கூறுவேன்.**

## புலம்பெயர்ந்த நம் தமிழர் மனம் புண்படலாமோ?

- புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையிட்டு வெவ்வேறு பட்ட சந்தேகங்களை கொண்டிருப்போருக்கு மேற்கூறிய தகவல் முழுமையான சமாதானத்தை தராதிருக்கலாம்.
- இலட்சம் இலட்சமாக உழைக்கிறார்கள், இலட்சியம் அற்று வாழ்கிறார்கள்.
- இனத்தின் விழுமியங்களிலிருந்து வழுவிப் பணத்தை மட்டுமே இலக்காகக் கொண்டு வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமயத்தை, மொழியை, சமூகத்தின் கலாசாரத்தை புறக்கணித்து, பிறர் சமயம், மொழி. கலாசாரப் போர்வையுள் மறைந்து கொண்டனர்.
- இவ்வாறு பலவாறான முணுமுணுப்புக்கள் முறைப்பாடுகள் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் பற்றி உள்ளன. இவை முழுமையாகவே புறந்தள்ளத்தக்கனவும் அல்ல. ஆனால் புலம்பெயர்ந்த முழு இனத்திற்கும் இவை பொருந்தும் என்பதல்ல.
- இலட்சம் இலட்சமாக உழைப்பதற்கு அவர்கள் உண்மையிலேயே இரத்தம் சிந்தியே ஆகவேண்டிய துன்பகரமான வாழ்க்கையிலேயே உள்ளார்கள் என்பதும்.....
- இயந்திரங்களுக்கு ஒப்பான கடினமும், கடுகதியும், காலம் தவறாது உடலை வருத்தியும், கண்ணீர் சிந்தியும் கடவுளை வேண்டியும், கடும் குளிரில் கை கால் மரத்தும், ஓடி ஓடி உழைக்கின்றார்கள் என்பதும்....
- தாய் நாட்டிலிருந்து ''செத்துப்போன'' பல முயற்சிகளுக்கு மத்தியிலும் அற்ப சொற்ப நம்பிக்கையோடு சீவிய மூச்சுக் காற்றை இழுத்துப் பிடித்து எண்ணற்ற சோதனைகளைச் சந்தித்து, அடி வாங்கி, வறுமைப்பட்டு, அந்நிய தேசங்களின் நகர வீதிகளில் கையேந்தி, நாள் கழித்து அரைகுறை உணவுடன் தகுதியும் தராதரமும் இழந்து, தொழில் புரிந்து......
- பெற்றோர் சிந்திய வியர்வை எனும் நிறம் மாறிய இரத்தத்தில் சேர்ந்த சொத்து முழுவதையும் சேர்த்துச் செலவழித்து....
- முதுமைப் பராயத்தில் பிள்ளைகளின் வாழ்விற்காகவே மூச்சு விட்டுக் கொண்டிருக்கும் பெற்றோரை புலம் பெயர்ந்த தேசத்தின் பல புழுக்கங்களுக்கு மத்தியிலும் நினைவிற் கொண்டு....
- திருமண வயதினை எட்டியும், திருமணத்தை தீண்டாமலேயே தினமும் கனவு வாழ்க்கையில் காலம் கழித்து, கடவுளை மட்டும் நம்பி, காலத்தில் வரும் விரதங்கள் அனைத்தையும் அனுட்டித்து 'காலம் வரும், கல்யாண ஊர்வலம் வரும்' என்று காத்திருக்கும் உடன்பிறப்புக்களை உள்ளத்தில் இருத்தி....
- உடலை வருத்தி, உணவை ஒறுத்து, உழைத்து, தம் துன்பம் ஒன்றினையும் தம்மை நம்பித் தாய் நாட்டில் இருப்போருக்கு வெளிப்படுத்தாது, தம்மை நம்பி இருப்போருக்கும் தமது உறவுகளுக்கும் மட்டுமல்ல - வாழ்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடாமல் போராட்டமே வாழ்க்கை எனக் கொண்ட ஏனையோருக்கும் அள்ளி வழங்கி....

- அந்நிய தேசத்தின் எத்தனையோ சவால்களோடு போராடும் நம் இனத்தின் புலம் பெயர்ந்த உறவுகளின் உண்மை நிலையை அறிவது - புரிவது உடனடியாக முடியாதது. ஆயினும் வீணாக விமர்சனங்களை எழுந்தமானத்தில் வெளிப்படுத்தாது விடுதல் நல்லது. இது ஒரு புறமாக.....

## ''பாதம் பதிக்கும் இடமெல்லாம் பைந்தமிழ் விதைக்கும் தமிழர்''

''தொலைபேசி உரையாடல் ஒன்றில் வரும் சில தமிழ் வார்த்தைகள் புலம்பெயர்ந்தோர் தமிழ் வளர்ப்பதற்கு பொருத்தமான ஆதாரமாகுமா?'' என்று கேட்போருக்கு புலம்பெயர்ந்து வாழும் நம் தமிழர் அந்தந்த நாடுகளில் தமது முனைப்பாலும், உழைப்பாலும் உருவாக்கி, நிர்வகித்து, நிலைப்படுத்தி, செயற்படுத்தும்.....

- தமிழ்க் கலாலயங்கள்
- தமிழ்ப் பணி மன்றங்கள்
- புனர்வாழ்வுப் புகலிடங்கள்
- ஐரோப்பிய நாடுகளின் நவீன மாடிக்கட்டடங்களையே நிமிர்ந்து நோக்கச் செய்யும் வானுயர்ந்த கோபுரங்களைக் கொண்ட இந்துக் கோயில்கள்.
- பரத நாட்டியம், வீணை, வயலின், மிருதங்கம் எனும் நமது கவின் கலைகளுக்கான பயிற்சிக் கூடங்கள் அரங்கேற்றங்கள்.
- தமிழ் மரபு மீறாத, தமிழ் மணம் கமழும் மங்கல நிகழ்வுகள்.
- தமிழ் அரிச்சுவடி தொடக்கம் அருங்கலைகளின் தேட்டம் வரைக்குமான அரிய முயற்சிகள் - ஆக்கப்பூர்வ பணிகள் அனைத்தும்....

தமிழை - தமிழின் விழுமியங்களை - தமிழ் மற்றும் இந்து கலாசாரத்தின் மேம்பாட்டினை எண்ணற்ற சவால்களுக்கு மத்தியில் எதிர் நீச்சல் இட்டு நிலைப்படுத்துகின்றனர். வலுப்படுத்துகின்றனர். வாழ்விக்கின்றனர் என்பது, நெஞ்சு தொட்டு நிமிர்ந்து நின்று கூற வேண்டிய நாம் காலத்திற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் மத்திய கல்லூரி அதிபர் திருமதி C.A. ஸ்மித் அவர்களிடத்தில்
பரிசில் பெறும் போது திரு. ஜெ. திவ்வியநாதன் அவர்கள்





அரசாங்க சார்பில் ஜேர்மனி
சென்றிருந்த போது அந்நாட்டு
உயர் அதிகாரிகளுடன்
திரு .ஜெ. திவ்வியநாதன்
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசாங்க சார்பில் ஜேர்மனி சென்றிருந்த போது அந்நாட்டு
உயர் அதிகாரிகளுடன் திரு .ஜெ. திவ்வியநாதன் அவர்கள்



அரசாங்க சார்பில் ஜேர்மனி சென்றிருந்த போது அந்நாட்டு
உயர் அதிகாரிகளுடன் திரு .ஜெ. திவ்வியநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருங்காலத்திற்கும் கூறியே ஆக வேண்யடி செய்தியாகும்.

எந்த உள்வாங்கல்களும், எந்த அந்நியக் கலப்புக்களும் நம் தாய்த் தமிழின் தனித்துவத்தை தளர்வடைய செய்வன அல்ல - மாறாக நமது தமிழ் நெளிந்தும், வளைந்தும், தரணி எங்கும் பரந்தும் வாழத் தகுதி கொடுக்கின்றன.

'விதையானது விழுந்து மடியாதுவிட்டால் விருட்சம் வராது' என்று கிறிஸ்தவ வேதாகமம் கூறுகின்றது.

செல்லும் இடமெல்லாம் தமிழன் விதையாக வீழ்ந்தான். தமிழ் விருட்சமாக உயர்ந்து ஆங்காங்கே நமக்கும் இன்னும் பலருக்கும் நிழல் தருகின்றது. பாரத தேசத்தில் தென்கோடியின் தமிழ் நாட்டிலும், சின்னஞ்சிறு இலங்கைத் தீவிலும், சிங்கப்பூரிலும். மலேசியாவிலும் அங்கீகாரத்தில் இருந்த தமிழ், இன்று அமெரிக்காவில், கனடாவில், இங்கிலாந்தில், பிரான்சில், சுவிட்சர்லாந்தில், ஜேர்மனியில், இத்தாலியில், டென்மார்க்கில், சுவீடனில், நியூசிலாந்தில், தென் ஆப்பிரிக்காவில் - எங்கெல்லாம் தமிழன் பாதம் பதித்தானோ. தமிழ் அங்கெல்லாம் அதன் பண்பு மறையாது விதைக்கப்பட்டு வாழுகின்றது. எனவே எக்காலத்திலும் எவரும் இனியும்....

'மெல்லத் தமிழ் இனி.... அது சொல்லும் தரமற்றுப் போகும்' என்று சொல்லாதிருப்பார்களாக அங்கலாய்க்காது வாழ்வார்களாக.

என் தமிழ் பற்றி என் எண்ணத்தின் சில பகுதிகள் மேற்கண்டவை. இவை எனது எண்ணங்களேயன்றி எல்லோருமே ஏற்க வேண்டும் என்பது அல்ல. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்பது மனித உரிமை என்று நம்புபவன் நான். அந்த வகையில் கூறப்பட்டவையே இவை ஆனால்......

நம் அனைவராலும் இந்தக் கருத்துக்கள் ஏற்புடையவனாக கணிக்கப்படுமாயின் தமிழர் தடுமாற மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறை

1. அகத்தினிலே இறையொளி இணைந்துமே - நிலைத்திட்டால்
புறத்திருள் அனைத்துமே புறம்காணும்

2. மனந்தனிலே மதங்கொண்டு மதம்கண்டு - மாறுபட்டால்
சினந்தன்னை அடக்கிடா சிறுமைகாண்பாய்

3. உன்மதம் துதித்துப் பிறர் மதித்து உள்ளது இறை எனக்கண்டால்
எம்மதத்துள்ளும் சம்மதம் காண்பாய்

## அன்னை

1. அன்னையவள் கருவறையைத் தான்மட்டும் - பெற்றதனால்
என்னைக்காத்துப் புறந்தந்த அருள் இல்லம்
2. தன்பெயரை என்பெயரின் முன் இடாது - தானடங்கி
முன்னிடத்தை தந்தைக்கு தந்த நற்தியாகி

## மொழி

1. சித்தமும் நாவும் செவியிரண்டும் தாம் இணைந்து - சேர்ந்து
மொத்தமாய் ஈந்தளிக்கும் சொத்து

2. எந்தனது எண்ண வீழ்ச்சி தடையற்றுத்தான் வந்து
உந்தனது சிந்தை சேர்க்கும் உரிய வாய்க்கால்

3. பிறப்பனைத்துட் பெரும் பிறப்பு மனுப்பிறப்பு - என உரைப்பின்
அப்பிறப்பின் அருங்கொடையே அரிய மொழி

## கல்வி

1. கற்பதனால் வருவதுதான் கல்வியல்ல - கற்பதுடன்
காண்டலும், கேட்டலும் தெளிதலுமே கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

1. சித்தத்தால் நாவால் செயற்பாட்டால் எப்போதும் தப்பதனைத் தடுப்பதனால நட்பிற்கும் களங்கமற்ற கற்புண்டு.

2. நண்பனவன் செல்லும் வழி நல்லதல்ல என்று - கண்டால் அன்பதனை அடக்கி வைத்து ஆத்திரத்தை வெளிக்காட்டு.

## தெய்வ சித்தம்

சுவர்க்க சிங்காசனத்தில் வீற்றிருந்த தூதன்மார் சேவையை ஏற்றிருந்த தூயதேவன் மண்ணுலகிலே மனிதனாய் உருவெடுத்தார். ஆனால் மன்னர் மாளிகையிலே பிறந்தாரோ? மஞ்சத்திலே துயின்றாரா? மன்னரோடு மன்னராய் வாழ்ந்தாரா? இல்லையே. அவர் பிறந்ததோ சத்திரத்தில் அவர் துயின்றதோ மாட்டுக் கொட்டிலில் அவர் வாழ்ந்ததோ ஏழைகளின் மத்தியில். இது ஏன்? அதுதான் தெய்வசித்தம். அவரின் திட்டத்தையும், சித்தத்தையும் அறிந்துகொள்ளுமளவிற்கு நமக்கு அறிவில்லை. மனிதர் வாழ்க்கையிலும் அவர் நிகழ்த்தும் சம்பவங்களுக்கு காரணங்களை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. அவை எல்லாம் ''தெய்வசித்தம்''.

**பிள்ளைகள்**

**சுதன், சுகன்னியா, சுவேதினி**



ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்களுடன் திருவாளர் அமிர்தலிங்கம், ரெலோ எம்.பி திவ்வியநாதன், ஈ பி ஆர் எல் எவ் எம். பி திரு. பிரேமச்சந்திரன் ஆகியோர் சகிதம் கலந்துரையாடிய போது பிடிக்கப்பட்ட படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல் ஆசான்

**Late Hon. J. Thiviyanathan** B.A. Hons. Former M. P. Digamadulla திருக்கோவில் என்னும் கிராமத்தில் மெதடிஸ்த கிறிஸ்தவம் தோன்றிய காலத்தில் முதல் கிறிஸ்தவ குடும்பமாக இருந்து, அக்குடும்பத்தின் வழிவந்தவர்களில் ஜெயரெட்ணம் ஆசிரியரின் புதல்வனாக பிறந்தவர் இவர்.

எல்லா காலகட்டங்களிலும் இறை நம்பிக்கையில் சற்றும் தளராத இவர் அருளுரை ஆற்றுவதில் வல்லவர். கருத்துக்களை ஆழமாகவும், பிறசமயங்களின் சிறப்பான தத்துவங்களையும் ஒப்பிட்டு தெளிவாக கூறிவந்த ஒருவர்.

இவர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குபவர்கள். பொருளாதார இடையூறுகள் இருந்த போதிலும், சிறப்புப் பட்டத்துடன் தனது கல்வியை வெற்றிகரமாக முடித்த ஒருவர். கல்விப் பணியை ஆற்ற விரும்பி சுயமாக மீட்டல் வகுப்புகளையும் போதனை வகுப்புகளையும் மாணவர்களுக்கு சிறப்பாக நடாத்தியவர். இவர் மூலம் பயன் பெற்றவர்கள் இதற்கு சான்று பகர்கின்றனர்.

இப்பெருமகனின் பின்னணியில் அரசியல் கலந்து இருந்தது. அவர்கள் உரிமைப் போராட்டங்களில் பங்கு கொள்பவர்களாகவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட, முதன்மையாக நின்று உழைத்தவர்களாகவும் இருந்தார்கள். எனினும் சந்தர்ப்பவசமாக தேர்தலுக்கு இவர் தெரிவுசெய்யப்பட எல்லாவித சிறப்புகளும் இவருக்கு இருந்ததனால் பாராளுமன்ற உறுப்பினராகி, மக்களுக்கு சேவையாற்றி, ஒருகால கட்டத்தில் இந்த நாட்டின் தலைவனுக்கு ஏற்பட்ட பதவி வீழ்ச்சி என்னும் நெருக்கடியான நேரத்தில் அதை சீர்செய்ய சிறுபான்மை இனத்தவனாக சத்தியக் கடதாசி கொடுத்து வீழ்ச்சி நிலைமாற முன்னின்று உழைத்தவர்.

பிள்ளைகள் தன்னைப் போன்று கல்விமான்களாக வரவேண்டும் என்று விரும்பி அதை முன்னின்று சாதித்தவர். மனைவி, பிள்ளைகள் மேல் மிகுந்த கரிசனை உடைய தகப்பனாக இருந்து, குடும்பமாக கூடி, வளர்ச்சிக்கு உரிய பல காரியங்களை கலந்துரையாடல் மூலம் தீர்த்து வைத்து, குடும்ப உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பியவர். அவருடைய வாழ்க்கையிலே இடர்பாடும், சோதனையும், மரணப் போராட்டங்களும் வந்தவேளையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி ஒரு மந்திரியாய், நண்பனாய் விழிப்போடு செயற்பட்டதை கூறி மகிழ்பவர்.

இளமைக் காலத்தில் இருந்து சிறுயோருக்கு உதவுவதில் விழிப்புணர்வு உடையவராய் இருந்த இவர், தனக்குக் கிடைத்த பதவிகளினால் சிறப்பான சமூக சேவைகளை ஆற்றினார்.

தம்பி தயாரித்து அளித்த வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்துகளை கண்டு களித்தவர்களில் நானும் ஒருவன். பாடல் வரம், கவிதை ஆற்றும் திறன் இன்னும் கலையோடு சம்பந்தப்பட்ட பல முயற்சிகளையும் அறிந்த ஒருவர்.

இவரது பேச்சுத்திறன் இவருடைய எல்லா பதவிகளிலும், அரசியல் மேடைகளிலும், பாராளுமன்றத்திலும் வெகுவாக உதவியது. சிந்தித்து தெளிவாக விரைவாக தமிழ்மொழியின் அழகு ஓங்கி நிற்க பேசுவதில் வல்லவர்.

நண்பர்களை மறக்காது நினைவு கூர்வதிலும், இல்லத்திற்கு வருபவர்களை உபசரித்து, மனைவியுடன் சேர்ந்து விருந்தோம்பல் செய்வதும் இவரது பண்புகளில் ஒன்று. தனக்கு ஏற்படும் கவலைகளை அழுகை மூலம் வெளிப்படுத்துவார். மகிழ்ச்சியை வாய்விட்டு சிரித்து மற்றவர்களையும் மகிழ்விப்பார்.

இளமைக் காலத்தில் இருந்து மரக்கறி உணவுகளை விரும்பியவர் இறுதிவரை அதை முறையாக கடைப்பிடித்து வந்தார். இளமைக்காலத்தில்இருந்தே இவரையும் இவர் குடும்பத்தாரையும் நானும் எனது குடும்பத்தினரும் நன்கு அறிவோம். அவரது இறுதி நாட்களில் அவரது கவலைகளையும், எதிர்கால செயற்பாடுகளையும் குறித்து என்னோடு பேசியவர்.

இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் என்னை சந்திக்க விரும்பினார். இன்னும் பல காலங்கள் வாழ்வார் என நம்பியிருந்தேன். திடீரென மறைவார் என்பது அவருக்கும் தெரியாது இருந்தது. அவரது மனைவிக்கும், குழந்தைகளுக்கும் ஆறுதல் கூறுவதோடு எனது ஆலோசனைப் பணி அவர்களுக்கு என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையையும் அளிக்கின்றேன்.

**Rev. N. Stanley Jeyaraj**

**From England**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நினைவுப் படிமங்களில் தம்பி திவ்வியன்

மறைந்தும் மறவாமல் மனதில் பதிந்துள்ளார் திரு. திவ்வியநாதன். இளமைப் பருவத்திலிருந்து அவர் எனக்கு அறிமுகமானவர். எண்பதுகளில் மிக நெருக்கமான சகோதரப் பாசம் கொண்ட உறவு வளர்ச்சியடைந்தது.

இளமைப் பருவத்தில் அவரது திறமைகள், தெளிந்த சிந்தனை, செறிந்த கருத்துப் பொலிவும் பேராதனை பல்கலைக் கழகம், திருச்சபை, சமுதாயம் இவற்றில் பயனுள்ளதாக அமைந்தது.

அன்பு, அறிவு, அருள், ஈகை என்னும் பண்புகளின் உறைவிடமாய் திகழ்ந்தவர். இவற்றோடு சொல், செயல் வன்மையுள்ளவராகவும், வீரமும், தீரமும், தோழமையுடயவராகவும் செயலாற்றிய பெருந்தகையவர்.

எவரென்றும் பொருட்படுத்தாது கௌரவத்துக்குரியவர்களுக்குக் கூட சொல்ல வேண்டியதை சொல்பவராக திகழ்ந்ததை அனுபவித்தேன்.

இவரது பேச்சு, எழுத்து, செயல் தேசத்தின் எழுச்சி என்ற இலட்சியமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. தம்பியின் வாழ்வின் பிரதிபலிப்பு அவரது இறைப்பற்றாகும். எத்தனையோ இன்னல்கள், இடர்கள், எதிர்ப்புக்கள், குரோதங்கள் அரசியல் வாழ்வில் எதிர் நோக்க வேண்டி இருந்தபொழுதும், ''திவ்வியன்'' எல்லா சவால்களையும் இறைமகன் இயேசுவில் வைத்திருந்த உறுதியான நம்பிக்கையோடு சவால்களுக்கு முகம் கொடுத்தார்.

சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் பணிகள் பல புரிந்தவர். தம்பியின் வாழ்வில் இரு சிறப்பு நற்பண்புகள் என் நினைவில்: அவை நன்றி உள்ளமும், இறைப் பற்றுமாகும்.

எனது நினைவில் என்றும் நன்றி மறவாத உள்ளம் படைத்த ''திவ்வியன்'' அதனை அடுத்து கிருபானந்தவாரியார் கூற்றின் பிரகாரம் ''இரக்கப் போயினும், இறைவனைத் தேடு'' திவ்வியன் தன் வாழ்வில் என்றும் இறைப்பக்தி உள்ளவராய் வாழ்வின், வழியுமாகிய இயேசுவின் வழியில் குடும்பத்தை வழிநடத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி சியாமளாவையும், பிள்ளைகளையும் மதித்து பாசத்துடன் பராமரித்து வந்தவர். தம்பி திவ்வியநாதனின் பிரிவு குடும்பத்திற்கும் திருச்சபைக்கும், சமுதாயத்திற்கும் ஈடேற்ற முடியாத இழப்பாகும்.

எனினும் ``எம் மீட்பராம் இயேசுவில் பற்றுறுதி உள்ளவர்கள் மரித்தாலும் வாழ்வார்கள்.'' என்ற இயேசுவின் கூற்றுப்படி எம் மதிப்புக்கும், பாசத்திற்குமுரிய சகோதரன், நண்பன், குடும்பத் தலைவன் ``திவ்வியன்'' நித்திய வாழ்வுக்குள் சேர்ந்துள்ளார் என்ற கிறிஸ்தவ விசுவாசம் எமக்கு ஆறுதலைத் தருகிறது.

சியாமளா, சுதன், சுகன்னியா, சுவேதினி இன்னும் தம்பியின் சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்களை ஆண்டவர் ஆறுதல் படுத்த இறைவனை மன்றாடுகின்றேன்.

எமக்கு அருட்பெரும் கொடையாக கிடைக்கப்பெற்ற திவ்வியநாதனுக்காக இறைவனுக்கு நன்றி!

அருட்திரு. சக்தி தம்பிராஜா
இளைப்பாறிய மெதடிஸ்த சபை குரு
கொழும்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுவரெலியா மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் அவர்களின் இரங்கல் செய்தி

இலங்கையின் புகழ் பூத்த சிறப்பு மிக்க சிலரில் நாவன்மையிலும், சமூகப் பணியிலும், கலாசார விழுமியங்களை பேணுவதிலும் சிறப்போடு சம காலத்தில் விளங்கியவர் அமரர். ஜெ. திவ்வியநாதன் அவர்கள் என்பது சகலரும் அறிந்த உண்மையாகும்.

நன்நெறியுடன் நல்லொழுக்க சீலராக வாழ்ந்ததோடு, தமிழின் மீதும், தமிழரின் மீதும் அலாதியான அன்பும், மரியாதையும், பற்றும் கொண்டவர், பிறிவியிலேயே அதிஉயர் பிறவியான மானிடப் பிறவியை பெற்றுள்ள நாம் அனைவரும் பிறந்த மண்ணுக்கும், சார்ந்த மதத்திற்கும், பேசும் மொழிக்கும் பணியாற்றுவது அவசியம் என்பதை உணர்த்தி வாழ்ந்த பெருமை கொண்ட அமரர். ஜெ. திவ்வியநாதனின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

மக்கள் பிரதிநிதியாக நாடாளுமன்றில் தனது பொறுப்பை எச்சரிக்கையுடன் தாம் சார்ந்த சமூகத்திற்காக, தமது மக்கள் நலனுக்காக தன்னை அர்ப்பணித்தவர். சென்னையில் இலங்கை தூதரகத்தில் உயர் பதவி வகித்து, தமிழ் நெஞ்சங்களை எல்லாம் தனது மொழி வளத்தால் ஈர்த்தெடுத்த நற்றமிழ் மகன் திவ்வியநாதனின் பிரிவு எம்மால் சகித்துகொள்ள முடியாத நிகழ்வாகும்.

அறப்பணியிலும், சமூகப்பணியிலும், சமயப்பணியிலும், கலை கலாசார பணியிலும் தீவிரமான ஈடுபாடுகளுடன் நற்பண்புகள் கலந்த அவரது செயல்பாடுகளும், பேச்சுத் திறமையும், சகலருக்கும் கருத்தும், சிறப்பும், விருப்பும் நிறைந்தவையாகும்.

தோன்றுவதும், மறைவதும் பேரின்ப வாழ்வில் இயல்பு என்றாலும், வாழும் காலத்தில் நெறிமுறை பிறழாமல் நித்தியமாக வாழ்ந்த பெருமைக்குரிய பெருமனிதன் திவ்வியநாதனால், காலத்தையும், காவு கொண்ட காலனையும் தனது சிறப்பு மிக்க செயல்பாடுகளால் கவர முடியாமல் போனது துரதிர்ஷ்டமே.

இலக்கியப் பணிகளிலும், இதயம் கனியும் சொல்லாடல் அரங்கங்களிலும் தனது நாவன்மைத் திறனால் வளம் கொண்டு விளங்கியதை இன்றும் என்னால் மறக்க முடியாது. பல நிகழ்வுகளில் எம்முடன் இணைந்து சிறப்புகளை பெற்றுக் கொடுத்த அருங்குணம் படைத்தவர்.

வாழ்வியலை வளமுடன் இனிதாக நடத்தியதுடன், இரக்க குணவியலாளராகவும், கருணை மனம் கொண்டவராகவும் வாழ்ந்து அனைவராலும் நேசிக்கப்பட்டவரை இழந்து தவிக்கும் அவரது துணைவியாருக்கும், பிள்ளைகளுக்கும், எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஆர். யோகராஜன் - பாராளுமன்ற உறுப்பினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட திவ்வியநாதன்

1984ல் மாண்புமிகு செ. இராசதுரை அவர்களின் கீழுள்ள பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்றலாகிச் சென்று, இந்து சமய கலாசார அலுவல்களுக்கும் பொறுப்பான பணிப்பாளராகக் கடமையேற்றேன். அரச கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் மாவட்டங்களுக்கு ஒவ்வொருவராக ஐந்து கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு அமைச்சின் பிரதான இந்துசமய அலுவல்களைப் புரிய ஒத்தாசையாக இருந்தனர். அவர்களுள், அம்பாறை மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த திவ்வியநாதன் தனது கூரிய அறிவு, பேச்சுவன்மை, எழுத்தாற்றல், விஷய ஞானம் ஆகியவை மூலம் தலை சிறந்தவராகக் காணப்பட்டார்.அதனால் அமைச்சு அலுவலகத்திலேயே முழுநேரம் பணிசெய்ய அமைச்சரினால் பணிக்கப்பட்டிருந்தார். இந்து நாகரிகத்தைச் சிறப்புப் பாடமாகக் கொண்ட பட்டதாரியாகிய இவர் திறந்த போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகள் பெற்று, கலாசார உத்தியோகத்தர் தெரிவில் முதலிடம் பெற்றவர் என்பதைப் பின்னால் அறிந்து கொண்டேன்.

அமைச்சர் பணித்த வேலைகளைச் செய்வதில் இவருடன் நெருங்கிப் பழக நேர்ந்தது. எல்லாருடனும் இனிமையாகக் கதைத்துப் பழகுவார்.அடக்கமான சுபாவம் கொண்ட இவர் பொய், அநியாயம். வஞ்சகச் செயல்களைக் கண்டு, கேட்டால் ஆத்திரங் கொண்டு பொங்கும் வேளை கண்களும் கலங்கும். ஆனால் சற்று நேரத்தில் அது அடங்கி விடும். கொடுத்த வேலையை தாமதிக்காது பொறுப்புடன் செவ்வனே செய்து முடிப்பார். கட்டுரை எழுதுவதில், அமைச்சு சம்பந்தமான செய்திகளைத் தயாரிப்பதில், உடன் பேசவேண்டிய சந்தர்ப்பங்கள் ஆகிய துறைகளில் இவரது திறமை நன்கு புலப்பட்டது. எமது இந்துசமய ஆராய்ச்சி நிலையம் தொடர்பாக நாம் செய்த வேலைகளில் இவரின் ஆழந்த இந்துசமய அறிவைத் தெரிந்து வியந்துள்ளேன். அமைச்சரின் அவசர பணிப்புரையாக இருந்தால் மாலைநேரம் வீடுதிரும்பும் எண்ணமின்றி அந்த வேலையுடன் ஈடுபட்டிருந்து செய்து முடித்து ஒப்படைத்து விட்டுத்தான் செல்வார்!

திவ்வியநாதன் துணிச்சல் மிக்கவர். கிறிஸ்தவராகப் பிறந்து வளர்ந்து ஆளாகி, இந்து நாகரிகத்தில் சிறப்புப் பட்டம் பெற்றதோடல்லாமல், உயர் இந்துக் குடும்பப் பெண்ணை காதலித்து மணந்து கொண்டவர். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் திகழ்ந்த மனைவி மிக அடக்கமானவர். முக்கியமாக வாழ்க்கையின் கஷ்டமான காலங்களில் ஆறுதல் வார்த்தைகளும், ஆலோசனைகளும் கூறி அவருக்குப் பக்கபலமாக இருந்து, மூன்று பிள்ளைகளைப் பெற்று வளர்த்து இனிய குடும்பம் நடத்தி வந்தனர்.

ஒரு சமயம் அம்பாறையில் சில இளைஞர்களுடன் கூட்டாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, தடுப்பு முகாமில் வைக்கப்பட்டு சித்திரவதைக்கும் உள்ளாகி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு வெளியே வந்து தன் வேலையைத் தொடர்ந்தவர் திவ்வியநாதன்.

சவால்கள் அவரை மேலும் வலுப்படுத்தின. தனது ஊர்மக்களை ஒன்று திரட்டி அவர்களின் மேம்பாட்டுக்காக தனியாளாக நின்று பிரசாரஞ் செய்து முதற் தடவையே திகாமடுள்ள தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்ட பெருமைக்கும் ஆளாகியவர்.

தம் மக்களுக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த இவர் பல சிரேஷ்ட பாராளுமன்ற அங்கத்தவர்களின் நன்மதிப்பையும் பெற்று விளங்கியவர்.

இவர் பாரம்பரிய நாட்டுக்கூத்தில் பெரிதும் ஈடுபாடுகொண்டவர் எனவும் அறிந்தேன். பல நாட்டுக் கூத்துகளில் நடித்ததோடு மட்டுமல்லாமல், நாடகப் பிரதிகள் எழுதி, பலரைப் பழக்கியும், பயிற்சியளித்தும் நெறிப்படுத்தியவர் எனவும் அறிந்தேன்.

ஒருமுறை சரியான தாளக்கட்டுப் பற்றி அவர் பேசுகையில் முத்தமிழும் அவரது மனதிலும் உடலிலும் ஊறி இருந்ததை அவதானித்துப் பெருமிதமடைந்தேன்.

சமீபத்தில் நோய்வாய்ப்பட்டு உடல் தளர்ந்த நிலையிலும் அருகிவரும் நாட்டுக் கூத்தை மேம்படுத்த எண்ணி, அது சம்பந்தமான பழைய நூல்களை வாசித்து, எல்லா ஊடகங்களுக்கும் எழுத ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்திருந்ததாக அவரது மனைவி கூறக் கேட்டேன். ஆனால் ஏனோ காலன் அதற்கு இடங் கொடுக்கவில்லை.

இன்னும் எவ்வளவோ சாதிக்கக்கூடிய திறமையும், அனுபவமும் கொண்ட திவ்வியநாதன் மறைந்ததை என்னால் தாங்குவது கஷ்டமாக இருக்கிறது.

அவரது அன்பு மனைவிக்கும் பாசமிகு பிள்ளைகளுக்கும் இத்திடீர் மறைவு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. என் செய்வது; இறப்பை யாராலும் மாற்ற முடியாது. அவர் இறைவன் பாதம் சேர்ந்து விட்டார். என்றாலும் அவரது ஆத்மா, தான் பற்று வைத்திருந்த அன்பு மனைவிக்கும் பிள்ளைகள் மூவருக்கும் மறைமுகமாக இருந்து உதவியும் மன ஆறுதலும் அளிக்கும் என்பது எனது நம்பிக்கை.

கூரிய அறிவும், நேர்மைத் திறனும் கொண்டு, பல திறமைகளை உள்ளடக்கிய திவ்வியநாதனை அறிந்தோர் அவர் ஓர் அடக்கமான துணிச்சல் மிக்க சாதனையாளர் என்பதை என்றும் நினைவு கூறுவர்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாம் ஒன்று கூடிப் பிரார்த்திப்போமாக.

**திருமதி. ராஜலக்ஷ்மி கயிலாசநாதன்**

**இளைப்பாறிய மேலதிக செயலாளர்,**

**இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாகீச கலாநிதி பட்டம் பெற்றபோது
முன்னாள் ஜனாதிபதி கௌரவ ஜே.ஆர்,
திரு. ஜெ. திவ்வியநாதன் அவர்களை
கௌரவிக்கையில்



அம்பாறை எம்.பி யாக தெரிவு செய்யப்பட்ட
போது மக்கள் அளித்த
வரவேற்பில் திரு. ஜெ.திவ்வியநாதன்
அவர்கள்



இந்து கலாசார அமைச்சில் பணியாற்றிய
போது கலாசார உத்தியோகஸ்தர்களுடன்,
மேலதிக செயலாளர் மற்றும்
கௌரவ அமைச்சருடன்
திரு. ஜெ. திவ்வியநாதன் அவர்கள்



முன்னாள் ஜனாதிபதி கௌரவ ஜே. ஆர். பிரேமதாசா,
அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான்
மற்றும் முக்கியஸ்தர்களுடன்
திரு. ஜெ. திவ்வியநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஜனாதிபதி கௌரவ ஜே.ஆர், அமைச்சர் செல்லச்சாமி
அகியோருடன் திரு. ஜெ. திவ்வியநாதன்



திரு. ஜெ. திவ்வியநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " அன்புச் சகோதரனே "

"உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது"

(சங்கீதம் 31 : 19)

சொய்சாபுர தொடர்மாடிக் கட்டிடத் தொகுதியின் ஒரு பகுதியில் முதலாம் தட்டில் அமைந்திருந்த ஒரு வீட்டின் கதவை மெதுவாகத் தட்டினேன். 'வாங்கோ! வாங்கோ!' என்ற சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன்.

புன்சிரிப்புடன்கூடிய வரவேற்பும், தமிழனுக்கே உரித்தான உபசரிக்கும், பண்பும், எனக்குள் ஊசலாடிய தயக்கத்தை அடியோடே அழித்துவிட்டது. அந்த நாள்தான் சகோதரன் திவ்வியநாதன் அவர்களையும் அவரது குடும்பத்தையும் நான் முதன்முதலாக சந்தித்த நாள்.

கிறிஸ்தவ பண்பின்படி 'Brother' என்று அழைப்பதா, அல்லது எப்படி அவரை விழித்துப் பேசுவது என்ற தயக்கம் எனக்கு. ஆனால், புகழ்பெற்றவர், பெரிய பேச்சாளர், தமிழில் அதீத பற்றுமிக்கவர். ஒரு அரசியல்வாதி என்றெல்லாம் அவரைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்த எனக்கு **'நீங்கள் என்னைத் தம்பி என்றே அழைக்கலாம்'** என்று அவர் சொன்னபோது ஆச்சரியமாக இருந்தது.

அவரைக் குறித்து அநேகர் அநேக விடயங்களை எழுதலாம், கூறலாம். வெளிவாழ்வில் அவர் எவ்வளவுதான் உயர் நிலையில் வாழ்ந்திருந்தாலும், என்னைப் பொறுத்தளவில், தனது குடும்ப வாழ்வில் தன் மனைவி பிள்ளைகளில் அவர் காட்டிய பரிவும், பாசமும் என் உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தது.

உயரிய நிலையில் வாழ்ந்தாலென்ன, வாழ்க்கைப் புயலில் அலசடிப்பட்டிருந்தாலென்ன அந்தப் பாசப்பிணைப்பு எந்தவிதத்திலும் தொய்ந்து போகவேயில்லை. சகோ. திவ்வியநாதன் அவர்களுக்கு கடவுள் கொடுத்த பெருங்கொடை அவருடைய அன்பு மனைவியும் பிள்ளைகளும்தான் என்றால் அது மிகையாகாது.

என் ஞாபகத்திலுள்ளபடி அவர் என்னிடம் பேசும்போதெல்லாம் அடிக்கடி சொல்லுகின்ற ஒரு வார்த்தை, **'தேவன் பார்த்துக்கொள்வார்'** என்பதாகும். அன்று ஒரு கிறிஸ்மஸ் தினம். கிட்னி வியாதியால் அவதியுற்றதைக் கேள்வியுற்று, அன்று அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்மஸ் தினத்தன்று தன்னைப் பார்க்க வந்துவிட்டதைச் சொல்லி சொல்லி ஒரு குழந்தைபோல அவர் அடைந்த மகிழ்ச்சி பெரிது. மெலிந்து நலிவுற்றிருந்த அந்த வேளையிலும் எழுந்து உட்கார்ந்து கரம் கூப்பி அவர் ஜெபித்தது இன்றும் என் கண்முன் நிற்கிறது. அந்த நிலையிலும். **'தேவன் நடத்துவார்'** என்றுதான் சொன்னார்.

ஒவ்வொரு மனுஷனும் அவனைப் படைத்த தேவனுக்கே சொந்தமானவன். ஒவ்வொருவர் பேரிலும் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். வாழ்க்கை பல சிக்கல்களுக்குள் அகப்பட்டு சின்னாபின்னமாகினாலும்கூட, ''இயேசுவே என்று மனமார கூப்பிட்டழைக்கும் ஒவ்வொரு குரலுக்கும் செவிகொடுத்து, அவனை ஏற்று, இரட்சிக்க வல்லவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து.''

பூவுலகில் வாழுகின்ற ஒவ்வொருவரின் மீட்புக்காக, அவர் தமது சொந்த இரத்தத்தையே பலியாக சிந்தியவர். சகோதரன் திவ்வியநாதன் அவர்கள் தனது வாழ்வில் எதையெதையோ சாதித்திருக்கலாம். பெரிய பணிகள் செய்திருக்கலாம். ஆனால், ஆண்டவர் இயேசு கிறிஸ்து அருளிய கிருபையின் ஈவாகிய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள தேவன் சகோதரனுக்குக் கிருபை ஈந்தாரே, அதுவே அவருக்குக் கிடைத்த மகா பெரிய பாக்கியம். அவர் விட்டுப்போன உறவுகளையும் அதே கிருபையே இன்றும் தாங்குகிறது. இன்னும் தாங்கும்.

சகோதரனுடைய வாழ்வுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவருடைய அருமையான குடும்பத்தையும், தேவன் தாமே தொடர்ந்து வழிநடத்த வேண்டுமென்று ஜெபித்து இதனை முடிக்கிறேன்.

நன்றி

**சாந்தி பொன்னு**

**சொய்சாபுர தொடர்மாடி,**

**மொறட்டுவை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mr. J. Thiviyanathan

Late Mr. J. Thiviyanathan who was the Member of Parliament in Digamadulla District and also a colleague of mine, served as Minister, in our Deputy High Commission in Chennai, during my tenure in Chennai as Deputy High Commissioner.

During his term in Chennai, Mr. Thiviyanathan rendered yeomen services to our fellow Sri Lankans and also contributed to the development of Indo-Sri Lanka relations, with a special focus on Tamil Nadu. This was evident through his excellent media work.

Mr. Thiviyanathan was a kind hearted and sincere officer who shared his warmth with all fellow members of the Deputy High Commission. He was the type of officer who, despite health conditions, chose to work around the clock and complete all his assignment without any complaints.

I first came to know him during my University days, when he was a Parliamentarian, through his speeches in public and in Parliament. Later, I had the opportunity to know him personally when he worked at our Mission in Chennai. During his tenure at the Deputy High Commission I found him to be very knowledgeable in Tamil language and literature which also greatly contributed to the newsletter published by the Mission. This greatly substantiated our mission's aim to reach out to the people of Tamil Nadu.

Mr. Thiviyanathan, a loving father and husband, was a true Sri Lankan who wanted to witness a united Sri Lanka, where all communities lived amicably and in peace. He would have been a rich resource for reconciliation related work. His unexpected departure was too premature and his demise has certainly created a lacuna in the Eastern Province.

May his soul rest in peace.

**V.Krishnamoorthy**
DG/South Asia
Ministry of External Affairs
Colombo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரும் நினைவுகளில்....
# மறக்கமுடியாத திவ்வியம்....

நாடு உனக்கு என்ன செய்தது என்று கேளாதே - நீ
நாட்டுக்கு என்ன செய்தாய் என்று கேள்!
இப்படி ஒரு பொன்மொழியுண்டு - இதையே
நீ நாட்டுக்காக எதுவும் செய்வதற்கு உனக்கு
சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றாலும் - உனது
சமூகத்திற்கு. நீ வளர்ந்து வாழ்ந்த ஊருக்கு, உன்னால்
முடிந்த சேவையை செய்.! -
இதுவே ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டிய முக்கியமானதொன்று.

அந்த வகையில் பார்த்தால்... ஊருக்காக, தமிழ் உறவுக்காக தன்னாலியன்ற சேவையை செய்து, எல்லோர் மனங்களிலும் அன்புருவாய் வீற்றிருந்த அந்த திவ்வியநாதன் எனும் பொக்கிஷம் இவ்வுலகை விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டதை இந்த நிமிடம் வரை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை.

இந்த நிலையில் என் இதயக் குளத்திலிருந்து நீர்க்குமிழிகளாய் வெளிவருகின்ற நினைவுகளுக்கு என்னால் தடை போடமுடியவில்லை. உடன் பிறவாத அன்புச் சகோதரனாய், ஆருயிர் நண்பனாய், அறிவுரை கூறும் ஆசானாய் என்னோடிணைந்திருந்த அந்த கால கட்டத்தை மறந்து விடமுடியுமா?... அவற்றையெல்லாம் எழுத்தில் வடிக்க எண்ணுகிறேன். - ஆனால் அந்த திவ்வியம் உயிருடன் இல்லையே என்ற சோக நினைவுகள் என்னைத்தாக்கி தடைபோடுகின்றனவே..?

சுந்தரத் தமிழுக்கு சுவை சேர்த்து சுருதியோடு இசை பாடுவது போல் உன் அமைதியான குரல் இந்த வினாடி வரை என் இதயத்தில் ஓங்கி ஒலிக்கின்ற அந்த ஓசையின் தாக்கத்தில் கண்கள் குளமாக கடந்த கால காட்சிகள் முழுமையாக இல்லாவிட்டாலும் முக்கியமான காலகட்டங்கள் மனத்திரையில் மகுடம் போடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிக்க மறந்த என்னை சிரிக்க வைத்தாய்,
சிதறிய என் மனநிலையை சீராக்கினாய்
வாழ்வா, சாவா என்று தடுமாறிய எனக்கு
வாழ்க்கையென்றால் என்னவென்று புரிய வைத்தாய்
நான் துன்பத்தில் துவண்டிருந்த வேளையெல்லாம் - உன்
அன்பான, ஆதரவான வாரத்தைகளால் - என்னை
பண்பான மனிதனாக மாற்றினாய் - என்
இலட்சியத்தையும், ஆவலையும் புரிந்து கொண்டு
இலங்கை வானொலியில் என் குரல் ஒலிக்க வரம் தந்தாய்.

இப்படி எத்தனை எத்தனை? எதை சொல்வேன்? எப்படிச் சொல்வேன்? வாழ்க்கையே இவ்வளவுதானா? வாய்விட்டு சொல்லியழ முடியவில்லை!

''ஒரு பொல்லாப்பும் இல்லை;
எப்பவோ முடிந்த காரியம்''

அடிக்கடி உன் நா உச்சரிக்கும் மந்திரம் அலசிப் பார்க்கிறேன் இப்போது பிறப்பும், இறப்பும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை என்பது புரிகிறது.

ஆனாலும் பேதை மனம் பரிதவிக்கிறதே!...
திவ்வியம் மறைந்து போனதை ஏற்குதில்லையே..

ஊருக்காய், உறவுக்காய் உன் பொழுதைக்கழித்தாய்,
ஊன் உறக்கமின்றி மற்றவர்க்காய் பாடுபட்டாய்!
உன் நலனை கவனிக்க ஏன் மறந்தாய் நண்பா?

''நான் ஒரு தமிழிச்சியின் கருவறையில் இருந்தேன் என்பது பேறு. எனது தாய் தமிழில் பயனுள்ள பேறுகளை வழங்கும் துணிவுண்டு என்பது எனக்குப் பெருமை'' என்று சொல்லி தமிழ் தமிழ் என்று தமிழ்த்தாய் மீது உனக்கிருந்த தாகத்தையும், தவிப்பையும் வெளிப்படுத்த தரமாக ஈன்றாய் ஒரு ''முதற்கனியை!''

''முக்கனியில் நல்லதும், பழுதானதும் இருக்கலாம்; அதைத் தவிர்த்து நல்ல கனியை சுவையுங்கள்.'' என்று சொன்ன, தமிழ்க் கவியே, எங்கேயய்யா போய்விட்டாய்? பலகனிகள் படைப்பாய் என்று பார்த்திருந்த எனக்கு பட்டென்று செய்தி ஒன்று சட்டென்று என் காதில் விழுந்தது கதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கி நின்றேன். உண்மையா பொய்யா என பரிதவித்துத்துடித்தேன் முடியவில்லை நண்பனே...

உன் இழப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை! இறுதியாக உன் அன்பு முகத்தையாவது என்னால் பார்க்க முடிந்ததா? உன்னை வழியனுப்ப முடிந்ததா? அதுதான் மிகப் பெரிய சோகம்! நான் அன்பும், பாசமும் வைத்தவர்களில் இறுதியாக பார்க்க முடியாமல் போனவர்கள் என்றால்? ஒன்று எனது தகப்பனார்; மற்றது என் மதிப்புக்குரிய திவ்வியம்! இதுக்கு மேல் யார் யாரோ? விதி எப்படி எல்லாம் விளையாடுகிறது....?

உனக்காக உயிர் கொடுக்கும் உன் துணைவி முத்தான மூன்று பிள்ளைச் செல்வங்கள்! சுதனாய், சுகன்யாவாய், சுவேதினியாய், மலரவிட்டு நீ மட்டும் மறைந்து போனதேன் நண்பனே?

மனதிலே மாறாத வடுக்களாக, நீங்காத நினைவுகளாக நிலைத்திருக்கும் நினைவுகளுக்கு சொந்தக்காரனாக வாழ்ந்து விட்டுப் போக வேண்டியது தான்.! முடிவு என்று தெரிந்திருந்தும் - இது தான் நியதி என்று புரிந்திருந்தும், துன்ப நினைவுகளின் வலியை தாங்க முடியவில்லையே நண்பா!

அன்புக்குரிய திவ்வியா!
பூவுலகில் நீயும் சிரித்து, மற்றவர்களையும்
சிரிக்க வைத்தது போல... விண்ணுலகிலும்
நீ சிரித்துக் கொண்டேயிரு.
காலதேவன் கருணை வைத்தால் - விரைவில்
விண்ணுலகில் நானிருப்பேன்! ஏன் தெரியுமா?
உன்னுடன் சேர்ந்து சிரிப்பதற்கு....!
உன் காலடியில் என் கண்ணீர் பூக்களுடன்.

**சகோதரனாய்,உற்ற நண்பனாய்**
**இங்கிருக்கும்**
**கே. எஸ். ரகு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எல்லாம் போச்சு......
# எல்லாமே போச்சு....!"

உயிராய், உறவாய், உற்ற நண்பராய் திகழ்ந்த உயர்திரு திவ்வியநாதன் அவர்கள் இறைவனடி சேர்ந்து விட்டார் என்ற துக்கச் செய்தி கேட்டு இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக அங்கே நான் சென்றவேளை:

''எல்லாம் போச்சு....
எல்லாமே போச்சு....!"

என்று ஓங்கி ஒலித்த அந்த அவலக்குரல், அழுகுரல் என் நெஞ்சை தீயெனச் சுட்டது. அப்படியே சிலையாய் அசையாது நின்றேன்; அதிர்ந்து போனேன்!

இறைவன் படைப்பில் நல்லறம் என்பது இல்லறமே!

இத்தகைய நல்அறத்தினை இதய சுத்தியுடன் நாளும் பொழுதும் வளர்த்தெடுக்கும் இணைபிரியா அன்புத் தம்பதிகளுள் ஒருவரை விட்டு, மற்றொருவர் திடீரெனப் பிரிந்து போய்விட்டால்....

அதுவும் இந்த அதிர்ச்சி நேரடியாக, பேரிடியாக மனைவியானவரை தாக்கும் போது....

அந்தப் பேதை மனைவியினால் இத்தகைய பேரிழப்பினை தாங்கிக் கொள்ளத்தான் முடியுமா என்ன....?

கண்ணுக்குக் கண்ணாக காதலித்து, கரம் பற்றிய நல்லவரது - காலம் காலமாக கலந்து காபந்து பண்ணி வந்த வல்லவரது, உயிரனைய கணவரது மேலான அந்த உயிரே திடீரெனப் போய் விட்ட பிறகு, உலகில் தனக்கென இனி எது இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன என்ற நிர்க்கதி நிலையில் நிராதரவாய் தனித்து போய்விட்ட தடுமாற்ற நினைப்பில், தாளாத ஏக்கத்தில்:

''எல்லாம் போச்சு.... எல்லாமே போச்சு...!"

என்று என்னிடம் அன்று புலம்பி அழுத திருமதி. சியாமளா திவ்வியநாதனது அந்த தேம்பலைத் தேற்ற இற்றைவரை தெம்பில்லை எனக்கு. ஏற்ற சமாதானம் சொல்லி, தேற்றுவார் எவரும் நேற்றுவரை இருப்பாரோவென தேடிக் கொண்டிருக்கும் நான்......

**திருக்குறள் என். எஸ். சிவலிங்கம்**
**கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி..

முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜெயரெத்தினம் திவ்வியநாதன் அவர்களின் மறைவு எமது இலங்கை தாய் நாட்டிற்கும் நற்சிந்தனையாளர்களின் உலகிற்கும்பாரிய இழப்பாகும். சமீபகாலத்தில் எமது வீட்டின் அருகில் வசித்த அவருடன் மொத்தமாக சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இரு சந்தர்ப்பங்களில் கதைக்கும் வாய்ப்பு கிடைத்தது. அது இரண்டு யுகமாக அமைந்தது. அவர் எனது வாழ்வில் சந்தித்த அதிசயமான, பண்பும், கல்வியறிவும் கொண்ட ஒரு சிறந்த மனிதன். தனது வாழ்வில் நடந்த சம்பவங்கள் சிலவற்றை சொன்னார். தனது கல்வித்துறையையும் தனது ஆராய்ச்சி பற்றியும் சொன்னார். இந்து சமயத்தில் சிலவற்றிற்கு சொன்ன விளக்கங்கள் என்னைக் கவர்ந்தன. அவர் தந்தைக்கு உபதேசஞ்செய்த தனயன். அவரின் பேச்சுத் திறமையைக்கண்டு அரசியல்வாதிகள் அவரை அரசியலுக்கு ஈர்த்தெடுத்தனர். அவரும் ஆவலுடன் அதில் பிரவேசித்து அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரானார்.

தனது துன்பங்களிலும் துயரங்களிலும் துணை நின்ற தனது மனைவியைப் பற்றி பெருமையாகச் சொன்னார். பிள்ளைகளின் கல்விக்கு தான் முக்கியத்துவம் கொடுத்ததையும் சொன்னார்.

அவருடன் கதைக்க வேண்டுமென்று ஆவலும் ஆசையும் இருந்தபோதும் அவரின் நோயின் காரணமாக நான் அவரை குழப்ப விரும்பவில்லை. ஆனால் எம்மைவிட்டு இவ்வளவு விரைவில் செல்வாரென நான் நினைத்திருக்கவில்லை.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும், அவரின் குடும்பத்தினருக்கு தேவையான மன ஆறுதலுக்காகவும் இறைவனை வேண்டுகிறேன்.

**வைத்திய கலாநிதி பொ. சிவபாலன்**
**'சந்நிதியான் மெடிகல் சென்டர்'**
**வெள்ளவத்தை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Condolence Message

The news of sudden demise of Thiviyanathan sir was received with great shock and agony by me and the members of the Deputy High Commission of Chennai where he had successfully served as a top Diplomatic Official in the rank of "Minister (Political)" for few years. All the past and present officials of the Mission, when they were informed about the death of Thiviyanathan sir, were visibly shocked and said "we lost a very good human being". That statement is enough to highlight the fact that he had won the hearts of everyone with his love, affection, caring nature, honesty, sincerity, helping tendency and his top diplomatic qualities. Those who had worked with him and under him when he was the Minister and a Parliamentarian would vouch that the Government of Sri Lanka had lost a true politician who had truly fought hard to glorify the uprising image and goodwill of the government of Sri Lanka. His beautiful and meaningful speeches in grammar-rich Tamil at the Parliament, political meetings and at the events of importance,, his unmatchable Tamil literary works and the books he had penned on various subjects will vouch for his deep knowledge and love for Tamil language and his mastery over the language. His voice cannot be filled so easily, his friends say with pride. Lets salute a real political leader and a true-parliamentarian for all his achievements for the betterment of the nation and people and pray for the repose of his soul.

May The Lord give peace to his lovable family and guide them in His Path always

**S. Dominic Irudayaraj**
**Public Relations Officer**
**Deputy High Commission of Sri Lanka - Chennai**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படித்தான்
# மறக்கமுடியும் உங்களை..!!

- எங்கிருந்தோ! அப்பாவின் நண்பனாய் எம் வீட்டிற்கு வந்தீர்களே! அன்றொரு காலம். அந்நாளைத் தான் மறக்க முடியுமா...??

- உங்கள் நகைச்சுவைக் குறும்புப் பேச்சுக்கள் எத்தனை எத்தனை? அத்தனையும் எப்படித்தான் மறக்க முடியும்...??

- எனக்கொரு உற்ற நண்பனாய், அன்புச் சகோதரனாய், நீங்கள் பெற்றெடுக்காத அன்பு மகளாய், நல் ஆசானாய், என்னை பாசமாய் வழி நடத்தினீர்களே! அதைத் தான் மறக்க முடியுமா...??

- இன்னும் எத்தனை எத்தனை ஞாபகங்கள்! அத்தனையையும் எப்படி மறக்க முடியும்...?? மறக்க முடியாத அழியாத நினைவலைகளாய் என்றும் நீங்கள் விட்டுச்சென்ற நினைவுகள் அணையாத சுடராய் என்றென்றும் என் இதயத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கும்......

**என்றென்றும் பிரியமான**
**அனுப்பிரியா ரகுநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திவ்விய தீபமே!

திருக்கோவில் பதிவாழ்ந்த திவ்விய நாதனவர்
அருக்கன் போல் பணிபுரிந்து அரனடி சேர்ந்தார்
கருவிலே கல்வியும் கலையாத கலையுணர்வும்
திருவருளால் பெற்றவர் திகழ்ந்தார் திறமையுடன்

பல்கலைக்கழகம் சென்று பண்பாடு பேணியவர்
நல்லதோர் ஆசானாய் நற்பணி பல புரிந்தார்
கல்விப் பயிர்வளர்த்த கண்ணியவான் நாதனுமே
கல்லில் பொறித்திட்ட கலையாத எழுத்தானார்

மேடைப்பேச்சினிலே மேம்பட்ட வல்லாளன்
நாடகத்துறையிலே நலம்பெற்ற சீராளன்
பாராளுமன்று சென்று பண்பான உறுப்பினராய்
ஊரார் மெச்சிடவே உன்னத பணி செய்தார்

முப்பது வருடங்கள் முன்பாக அவர் செய்த
ஒப்பரிய கற்பித்தலில் உருவான பட்டதாரிகள்
கலைஞரைக் கொழும்பழைத்து கௌரவம் தந்த
நிலையான புகழ்பெற்ற நித்தியனை இழந்தோம்

அமிழ்தான உன்பேச்சால் அரங்கே அதிருமையா
தமிழாலே ஒப்பமிடும் தனித்துவம் கொண்டவர் நீர்
மாணவியாய் எனையேற்க மாதவம் செய்தேனே
மாண்புறு உன்புகழ் மண்ணிலென்றும் வாழுமையா

மாணவி
தம்பிலுவில் ஜெகா
(திருமதி ஜெகதீஸ்வரி நாதன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Acknowledgment

We wish to thank the relatives, friends, wellwishers and the Clergy from the Church. Who rushed to the Hospital on hearing the death of our dearest dear Mr. Thiviyanathan and later attended the funeral, conveyed heartfelt messages of condolence by way of letters, telegrams, telephones, sent floral tributes and assisted in mumerous ways.

We also thank the Prime Minister, M.P's and other officails of the Govt. Departments who sent special messages. We are also grateful to businessmen and other officers who visited us and showed their sympathy in person.

We hereby register our deepest gratitude who gathered and took part with us on this day (23.09.2012) of prayers for the eternal rest of Thiviyanathan's soul.

**Beloved Wife & Children.**

# நன்றியுரை

எமையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு என்றுமே நீங்காத நினைவுறுத்தி இவ்வுலக வாழ்வினை நீத்து இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவன் ஜெ. திவ்வியநாதன் அவர்களின் மரணச்செய்தி கேட்டு உடனடியாக வைத்தியாசாலைக்கு வருகை தந்த ஒவ்வொருவருக்கும், மற்றும் இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்ட திருச்சபையிலிருந்து வருகை தந்தவர்களுக்கும், தமது ஆழ்ந்த அனுதாபச் செய்தியை அனுப்பிய மாண்பு மிகு பிரதம மந்திரி அவர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தொழில் நிறுவனங்களிலிருந்து வருகை தந்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அத்தோடு தபால், தந்தி, தொலைபேசி மூலமும் மற்றும் மலர்வளையங்கள் அனுப்பி வைத்து தமது ஆழ்ந்த அனுதாபங்களை எல்லாவகையிலும் தெரிவித்த அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் 23.09.2012 இன்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றியுடன் **மனைவி, பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானத்தைச் சம்பாதி புத்தியையும் சம்பாதி என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு.

நீதி 4:5

என்னை அடித்தார்கள் எனக்கு நோகவில்லை என்னை அறைந்தார்கள் எனக்கு சுரணையில்லை நான் அதைப்பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்.

நீதி 23:35

தகப்பன் தான் நேசிக்கிற புத்திரனை சிட்சிக்கிறது போல கர்த்தரும் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை சிட்சிக்கிறார்.

நீதி 3:12

உன் வாய் அல்ல புறத்தியானே உன்னைப் புகழட்டும்
உன் உதடு அல்ல அந்நியனே உன்னைப் புகழட்டும்.

நீதி 27:2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org